முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

வழக்கு எண். ஓ.எஸ்.69/18

2020ம் வருடம் பிப்ரவரி மாதம் 13ம் நாள் வியாழன் கிழமை

பி டபிள்யூ. 1 என்பவரது வாக்கு மூலம் (1873ம் வருடத்திய 10வது விதியின்படி என்பவரால் ஆணையிடப்பட்டு பிரமாணம்
செய்யப்படுகிறது,

| | |
|---|---|
| பெயர் | தந்தைபெயர் |
| கிராமம் | தாலுகா |
| சமயம் | ஜாதி |
| தொழில் | வயது |

தேதி : 13.02.2020

குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்

வழக்குரையில் நானும் பிரதிவாயும் நண்பர்கள் என்று சொல்லியிருக்கின்றேன் எப்படி நட்பு என்ற விபரத்தை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் நான் குறிப்பிடவில்லை. பிரதிவாதி கோழிப்பண்ணை ஒன்றை வைத்திருக்கிறார். நான் கோழிப்பண்ணை அமைப்பதற்கு ஆலோசனை கேட்பதற்காக வங்கி அதிகாரி மூலமாக அவரை தொடர்ப்பு கொண்டேன். அவ்வாறு நான் ஆலோசனை கேட்பதற்கு முன்பாக பிரதிவாதி எனக்கு பழக்கம் கிடையாது. பிரதிவாதியினுடைய அவசர குடும்ப நிமித்தம் என்ன என்ற விபரம் நான் என்னுடைய வழக்குரையில் குறிப்பிடவில்லை. பிரதிவாதிக்கு என்ன முன்கடன் எதைத் தீர்ப்பதற்காக என்னிடம் கடன் வாங்கினார் என்ற விபரத்தை நான் குறிப்பிடவில்லை. 15.10.15 தேதியில் நான் புதுக்கோட்டை கீழ ராஜ வீதியில் உள்ள என்னுடைய பெமிலி சூப்பர் மார்க்கெட் கடை முன்பாக கொடுத்தேன். என்னுடைய வழக்குரையில் யார் யார் முன்பாக எத்தனை மணிக்கு நான் அதை கொடுத்தேன் என்று குறிப்பிடவில்லை. என்னுடைய தனிப்பட்ட வரவு செலவு மற்றும் கடை வரவு செலவு ஆகிய விபரங்கள் ஆடிட்டர் தணிக்கை உண்டு. பிரதிவாதிக்கு நான் கொடுத்த 14 லட்சம் ரூபாய் என்னுடைய தனிப்பட்ட முறையில் வியாபரத்திற்கு வைத்திருந்த பணம். அது கணக்கில் வரவில்லை. 14 லட்சம் ரூபாயும் எங்கிருந்து கொடுக்கப்பட்டது என்று கேட்டால் வங்கியில் எடுத்த பணம் மற்றும் வியாபாரத்தில் வந்த பணம் ஆகியேவற்றை மொத்தமாக வைத்திருந்தேன். சுகன்யா என்ற ஒரு பெண் என்னுடைய கடையில் 2015 முதல் 2017 வரை வேலை பார்த்தார். அதன்பிறகு அவர் நின்றுவிட்டார்.

செல்வகுமார் என்ற எலக்ட்ரிசியன் என்னுடைய கடைக்கு வந்து வேலை பார்ப்பது உண்டு என்று சொன்னால் தவறு. நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த அவர் பெற்றுக்கொண்ட பிறகு எத்தனை நாள் கழித்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்று கேட்டால் இரண்டு நாள் கழித்து நான் தாக்கல் செய்தேன். என்னடைய வழக்கறிஞர் அறிவிப்பு அவர் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் பணத்தை கொடுக்க வேண்டும் என்றும் தவறும்பட்சம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் சொல்லியிருக்கின்றேன். இவ்வாறு நான் காலஅவகாசம் கொடுத்தும் கூட அது முடிவடைவதற்கு முன்பாகவே வழக்கை தாக்கல் செய்யவேண்டிய காரணம் குறித்து என்னுடைய வழக்கறிஞருக்கு அது எனக்கு சரிவர தெரியவில்லை. பிரதிவாதி என்மீது மாவட்ட கண்காணிப்பாளிரிடம் மோசடி புகார் ஒன்றை கொடுத்தார் என்றும் அதன்பிறகு தான் நான் வழக்கறிஞருக்கு கொடுத்தேன் என்று சொன்னால் அந்த புகார் சம்மந்தமாக விசாரித்து முடித்து விட்டார்கள். அந்த விசாரணையானது புதுக்கோட்டை மாவட்ட காவல்துறை குற்றப்பிரிவில் நடந்தது. இது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அந்த காவல்துறை பிரிவில் விசாரித்தால் தெரிந்துவிடும். அந்த விசாரணைக்கு நான், என்னுடைய உறவினர், ஆடிட்டர் முஸ்தப்பா ஆகியோர் ஆஜர் ஆனோம் என்று சொன்னால் நான் சென்றேன் அவர் வந்தது எனக்கு தெரியாது. முஸ்தப்பா மீது புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். ஆனால் விசாரணைக்கு ஆஜராகி அவர் என்ன எழுதிக்கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி என்ன புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியும். அந்த புகாரில் நாங்கள் சீட்டு நடத்தியாதாவும் அந்த சீட்டு பணத்தை நாங்கள் திருப்பிக்கொடுக்கவில்லை என்று நானும் , ஆடிட்டர் முஸ்தப்பா மோசம் செய்துவிட்டதாக சொல்லியிருக்கின்றார். அந்த புகாரில் மேலும் பூர்த்தி செய்த 24 புரோநோட், 5 வெற்றுத்தாள்கள், 2 திருமயம் சார்பதிவாளர் பதிவு ஆவணங்கள் ஆகியவற்றை நான் பெற்றுக்கொண்டதாக அவர் சொல்லியிருந்தார். என்னுடைய மருமகன் பெயர் முகமது ஆதிக் அவருக்கு சொந்தஊர் செட்டிக்குளம். பிரதிவாதிக்கு பாதிய்ப்பட்ட டிஎன்55பிவி9464 என்ற எண் கொண்ட வாகனத்தை நான் என்னுடைய மேலே சொல்லப்பட்ட மருமகனுக்கு வாடகைக்கு பேசி வாங்கிக்கொடுத்தேன் என்று சொன்னால் தவறு. அது கிரையத்திற்கு வாங்கப்பட்டது. அந்த கிரையத்தை நான் இருந்து தான் பேசிமுடித்தேன். இதற்காக பிரதிவாதியிடமிருந்து டிஒ பார்ம் எதுவும் எழுதி வாங்கவில்லை. ஒரு ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார். டியூ இருப்பதால் அது முடித்துக்கொள்ளலாம் என்று சொன்னார். பிரதிவாதி வெளிநாட்டில் வேலை பார்த்து நிறைய சம்பாதித்தார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு பெரியஅளவில் செங்கல்சூலை வைத்திருந்தார் என்று சொன்னால் தவறு. கோழிப்பண்ணை மற்றும் செங்கல்சூலை ஒரே இடத்தில் தான் இருந்தது என்று சொன்னால் செங்கல்சூலை இருந்தது ஆனால் வேலை எதுவும் நடைபெறவில்லை. நான் பிரதிவாதியின் மீது பொன்னமராவதி காவல்துறை துணைக்கண்காணிப்பாளரிடம் 14 லட்சம் ரூபாய் வாங்கிக்கொண்டு மோசடி செய்துவிட்டதாக புகார் ஒன்றை கொடுத்தேன். அந்த புகாரில் போலிசார் பிரதிவாதியையும், ஆடிட்டர் முஸ்தப்பாவை விசாரித்தார்கள் என்று சொன்னால் என்னை மட்டும் தான்

விசாரித்தார்கள். மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்த அது விசார்ணையில் இருந்தபோதே அதே பிரச்சனை சம்மந்தமாக பொன்னமராவதி துணைக்கண்காணிப்பாளரிடம் நான் ஏன் புகார் கொடுத்தேன் என்று கேட்டால் நான் தான் முதன்முதலில் பொன்னமராவதி துணைக்கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் அதன்பிறகு தான் பிரதிவாதி மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார். எனவே யார் முதலில் புகார் கொடுத்த என்ற விபரத்தை சம்மந்தப்பட்ட விசாரணை ஆவணத்தை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். நான் புகார்கொடுத்தபிறகு பிரதிவாதி என்மீது பொன்னமராவதி காவல்துறை துணைக்கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றும் அந்த இரண்டு புகார்களையும் ஒரே நேரத்தில் விசாரித்தார்கள் என்று சொன்னால் அவர் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றும் காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் விசாரணையில் இருந்ததன் காரணமாக அதிலேயே தீர்த்துக்கொள்ளும்படி பொன்னமராவதி காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் சொல்லிவிட்டார் என்று சொன்னால் அது தவறு. என்னிடம் காட்டப்படுகின்ற ஆவணம் புதுக்கோட்டை மாவட்ட குற்றப்பிரிவில் நான் எழுதிக்கொடுத்த ஆவணத்தின் நகல் என்று சொன்னால் தவறு. அதைப்போல் என்னிடம் காட்டப்படுகின்ற ஆவணத்தை முஸ்தப்பா எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான், பிரதிவாதி மற்றும் எங்கள் இருதரப்பு ஆடிட்டர் இருந்து பிரதிவாதிக்கு நான் கொடுக்கவேண்டிய சீட்டு பணம் சம்மந்தமாக சமரசம் பேசினோம் என்று சொன்னால் பிரதிவாதிக்கு நான் கொடுத்த பணம் சம்மந்தமாக தான் பேசினோம்.

தொடர்ச்சி கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது
வழக்குநர் முன்னிலையில் சாட்சியின்
வாக்குமூலம் என்னால் தட்டச்சுருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில்
வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக்
காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொங்ளளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.